**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.63/2012**
Connected with OS.208/2011

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.06.2025 | தகப்பனார் பெயர்: | முனியாண்டி |
| பெயர்: | பாலசுந்தர் (DW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கொளத்தூர் | சமயம்: | |
| தொழில்: | விவசாயம் | வயது : | 55/2025 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 18.06.2025</u>

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து ஏற்கனவே யாருக்கு உரிமையானது என்றால் சிவாவிற்கு முன்பு சிவசிதம்பரத்திற்கு சொந்தமானது. சிவசிதம்பரத்திற்கு சொந்தமான சொத்து என்பதற்கு ஏதேனும் ஆவணம்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சிவசிதம்பரத்திற்கு அது பூர்வீக சொத்தா இல்லை அவர் மூன்றாம் நபரிடம் கிரயம் வாங்கிய சொத்தா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சிவசிதம்பரம் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணத்தை நான் பார்க்கவில்லை. நான் பாபு என்ற நபரிடமிருந்து தாவா தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளேன்.

2. சிவசிதம்பரத்தின் வாரிசு சிவா அவரின் வாரிசு பாபு என்ற அடிப்படையில் நான் கிரயம் பெற்றுள்ளேன். சிவசிதம்பரத்தின் மனைவி பெயர் கிருஷ்ணம்பாள் என்றால் சரிதான். சிவசிதம்பரத்திற்கு ராமகிருஷ்ணன், சிவா என்கிற இரு மகன்களும், சீத்தா என்கிற ஒரு மகளும் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்களில் சிவா இறந்துவிட்டார். சிவசிதம்பரம் தான்தாவா

சொத்தின் உரிமையாளர் என்பதற்கான ஆவணத்தை பார்க்காமலேயே நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சிவசிதம்பரத்திடம் எந்த வருடம் வரை தாவா சொத்து இருந்து என்றால் 1988 வரை இருந்தது. சிவசிதம்பரம் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிருஷ்ணம்மாள் எப்போது இறந்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது.

3. சிவசிதம்பரம் உயிருடன் இருக்கும்போது வாய்மொழி ஏற்பாடுமூலம் சிவாவிற்கு சொத்து கொடுக்கப்பட்ட விபரம் எந்த வருடம் என்றால் 1990-ம் ஆண்டு. வாய்மொழி ஏற்பாடு என்ன வகை ஏற்பாடு என்றால் செட்டில்மெண்ட் ஏற்பாடு. எந்த வருடம் ஏற்பட்டது என்ற விபரத்தை எனது பிராதில் நான் சொல்லவில்லை. அ.வ.63/2012 வழக்கின் எதிர்வழக்குரையில் வாய்மொழி ஏற்பாடு எந்த வகை என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அசையா சொத்துகள் கிரயம் வாங்கும்போது கிரயம் எழுதி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தால்தான் செல்லும் என்றால் சரிதான். எனக்கு சிவா எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.3 ஆவணம் என்பது போக்கி பத்திரமாகும். போக்கிய பத்திரம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்துள்ளேன். போக்கிய பத்திரம் எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் 50 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது.

4. பத்திரம் எப்போது வாங்கப்பட்டது என்றால் எழுதப்பட்ட தேதியிலேயே வாங்கப்பட்டது. பத்திரம் எங்க வைத்து டைப் செய்தார்கள் என்றால் எங்கள் வீட்டில் வைத்துதான் கையால் எழுதப்பட்டது. அதில் யார் யார் சாட் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் ஆறு, ஏழு பேர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். பத்திரத்தை செம்மங்குடியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் எழுதினார். பத்திரத்தில் சிவா இரண்டு கையெழுத்து போட்டுள்ளார். முத்திரைதாளில் ஒன்று, அடுத்த பக்கத்தில் ஒன்று கையெழுத்து செய்துள்ளார். பி.வா.சா.ஆ.3 ஆவணம் செல்லாது என்றாலும் இந்த வழக்கிற்காக போர்ஜரியாக தயார் செய்தது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது குத்தகை பத்திரம்

என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2-ல் கடந்த 16.08.2010-ம்தேதியிட்ட கிஸ்தி ரசீதில் சுப்பையா படையாட்சிக்காக பன்னீர்(குளத்துார்) என்று போடப்பட்டு பன்னீர் என்பது பேனாவால் அடிக்கப்பட்டு பாலசுந்தர் என நேரடியாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. சுப்பையா படையாட்சி யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள 22.03.2011 தேதியிட்ட கிஸ்தி ரசீதிலிலும் சுப்பையா படையாட்சி பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். சுப்பையா படையாட்சிக்கும் இந்த வழக்கிற்கும் என்ற சம்மந்தம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 2-ம் பிரதிவாதி பாபு என்பவர் அவரது கட்சி என்ன என்று தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாபு என்பவர் எனக்கு ஆதரவாக எனக்கு சாட்சியம் அளிப்பாரா என்றால் அவர் எழுதி தந்தவர் என்ற முறையில் எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பார். பாபு சீர்காழி SMH தொடக்க பள்ளியிலும், வடகால் ரஹ்மானியா உயர்நிலை பள்ளியிலும் படித்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாபு படித்த பள்ளி சான்றிதழை தாக்கல் செய்தால் அவரின் உன்மையான தகப்பனார் பெயர் தெரியவரும் என்றால் சரிதான்.

6. பாபு தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்கும்போது அவரது ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் வாரிசு சான்று, சிவாவின் இறப்பு சான்று இவற்றை தாக்கல் செய்தார். நான் இந்த வழக்கில் சிவாவின் இறப்பு சான்றோ, வாரிசு சான்றோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். சிவாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று, தாக்கல் செய்தால் பாபுவின் உண்மையான தகப்பானர் பெயர் தெரியவரும் என்பதால் அதை மறைப்பதற்காக நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாபுவின் தகப்பனார் பெயர் சின்னையன் என்று சொன்னால் சரியல்ல. சின்னையனுக்கும், கலாவிற்கும் பிறந்த மகன்தான் பாபு என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சிவாவின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான் அதில் சிவாவின் தகப்பனார் பெயர் சிவசிதம்பரம் என்று

உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பாபுவின் ஆதார் அட்டையின் நகல் என்றால் சரிதான். பாபுவின் மனைவின் பெயர் பிரியா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாபு வாகனம் இயக்க தனியாக உரிமம் பெற்றுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பாபுவின் குடும்ப அட்டை நகல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் அனைத்து பக்கத்திலும் S.பாபு என்று கையொப்பம் செய்துவிட்டு கடைசி இரண்டு பக்கத்தில் C.பாபு என எழுதப்பட்டு அது S என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**